I.A. No. 2/22 in HMOP. 113 /2022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் – 15.12.2023

ம.சா.1– சண்முகசுந்தரம் த/பெ – செந்தில்ஆறுமுகம்

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.2 முதல் சா.சா.ஆ.4 வரையிலான ஆவணத்தில் கதவு எண். 19 WGC ரோடு மற்றும் 19 A மற்றும் 19 B மற்றும் இதர வருமானங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதில் கார்த்திக்மாரிமுத்து என்பவரின் பங்குகளில் இருந்து வந்த வருமானம் காட்டப்படவில்லை என்றால் சரிதான். கார்த்திக்மாரிமுத்து என்பவரின் Divident வருமானம் காட்டப்படவில்லை என்றால் சரிதான், Divident வருமானத்திற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. சா.சா.ஆ.2 ன் படி 2019–2020 ஆண்டுகளில் கார்த்திக்மாரிமுத்துவின் ஆண்டு வட்டி வருமானம் ரூ.52,837/– என்றும், 2020–2021 நிதியாண்டில் வட்டி வருமானம் ரூ. 32,314/– என்றும், 2021–2022 நிதியாண்டில் ஆண்டு வட்டி வருமானம் ரூ. 24,879/– என்றும் சொன்னால் சரிதான். மேற்படி வருமானங்கள் அனைத்தும் கார்த்திக் மாரிமுத்துவின் வங்கி கணக்கில் இருந்த தொகைகளின் வட்டி வருமானம் என்றால் சரிதான். சா.சா.ஆ.2 முதல் சா.சா.ஆ.4 ஆவணங்களில் கார்த்திக்மாரிமுத்துவின் சம்பளம் மற்றும் சொத்துக்களில் இருந்து வந்த வருமானங்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை–**

வருமான வரி தாக்கல் படிவத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள்

தவிர வேறு சொத்துக்கள் இருந்தால் அது பற்றிய விபரம் வருமான வரி செலுத்தும் போது தான் தெரியவரும் என்று சொன்னால் அது பற்றி படிவத்தில் சொல்லியிருந்தால் தெரியவரும். 2019-2020 ஆண்டிற்கான கார்த்திக் மாரிமுத்துவின் வரித் தொகை ரூ.32,779/- செலுத்தியுள்ளார். 2020-2021 க்கான கார்த்திக் மாரிமுத்துவின் வருமானத்திற்கு வரித் தொகையாக ரூ.32,314/- செலுத்தியுள்ளார். 2021-2022 கார்த்திக்மாரிமுத்து வரித்தொகையாக ரூ.52,606/- செலுத்தியுள்ளார். சா.சா.ஆ.2 ல் பக்கம் 57 ல் M.E.M கம்பெனியில் கார்த்திக் மாரிமுத்துவிற்கு Shares உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவருடைய வரிவிலக்களிக்கப்பட்ட வருமானம் ரூ.1,976/-. 2021-2022 ல் பக்கம் 57 ல் M.E.M கம்பெனியில் கார்த்திக் மாரிமுத்துவிற்கு Shares உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவருடைய வரிவிலக்களிக்கப்பட்ட வருமானம் ரூ.4,348/-. 2020-2021 ல் பக்கம் 53 ல் M.E.M கம்பெனியில் கார்த்திக் மாரிமுத்துவிற்கு Shares உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவருடைய வரிவிலக்களிக்கப்பட்ட வருமானம் ரூ.3,286/-.

குறுக்கு விசாரணை- இல்லை.